## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 1-2 - வாலி மாவலத்து
## (திருபிருதி[1])

958 * வாலி மாவலத்து ஒருவனது உடல் கெட * வரிசிலை வளைவித்து * - அன்று
ஏலம் நாறு தண் தடம் பொழில் இடம் பெற * இருந்த நல் இமயத்து[2] **
ஆலிமாமுகில் அதிர் தர அருவரை * அகடுற முகடேறி *
பீலி மாமயில் நடஞ் செயும் தடஞ்சுனைப் * பிருதி[3] சென்றடை - நெஞ்சே! 1

959 கலங்க மாக்கடல் அரிகுலம் பணி செய்ய * அருவரை அணை கட்டி *
இலங்கை மாநகர் பொடி செய்த அடிகள் தாம் * இருந்த நல் இமயத்து[4] **
விலங்கல் போல் வனவிறல் இருஞ்சினத்தன * வேழங்கள் துயர் கூர *
பிலங்கொள் வாள் எயிற்று அரியவை திரி தரு * பிருதி[5] சென்றடை - நெஞ்சே! 2

960 துடிகொள் நுண்ணிடைச் சுரிகுழல் * துளங்கெயிற்று இளங்கொடி திறத்து * - ஆயர்
இடிகொள் வெங்குரல் இனவிடை அடர்த்தவன் * இருந்த நல் இமயத்து[6] **
கடிகொள் வேங்கையின் நறுமலர் அமளியின் * மணியறை மிசை வேழம் *
பிடியினோடு வண்டு இசை சொலத் துயில் கொளும் * பிருத[7] சென்றடை - நெஞ்சே! 3

961 மறங்கொள் ஆளரி உருவென வெருவர * ஒருவனது அகல்மார்வம்
திறந்து * வானவர் மணிமுடி பணி தர * இருந்த நல் இமயத்து[8] **
இறங்கி ஏனங்கள் வளை மருப்பு இடந்திடக் * கிடந்தருகெரி வீசும் *
பிறங்கு[9] மாமணி அருவி ஒடிழிதரு * பிருதி[10] சென்றடை நெஞ்சே! 4

962 கரைசெய் மாக்கடல் கிடந்தவன் * கனைகழல் அமரர்கள் தொழுதேத்த *
அரைசெய் மேகலை அலர்மகள் அவளொடும் * அமர்ந்த நல் இமயத்து[11] **
வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர் முளை * அளைமிகு தேன் தோய்த்து *

---

[1] பிரிதி
[2] இமயத்துள்
[3] பிரிதி
[4] இமயத்துள்
[5] பிரிதி
[6] இமயத்துள்
[7] பிரிதி
[8] இமயத்துள்
[9] பிறங்கல்
[10] பிரிதி
[11] இமயத்துள்

பிரசவாரி தன் இளம் பிடிக்கு அருள் செயும் * பிருதி[12] சென்றடை - நெஞ்சே! 5

963 பணங்கள் ஆயிரம் உடைய நல் அரவணைப் பள்ளி கொள் * பரமா! என்று *
இணங்கி வானவர் மணிமுடி பணி தர * இருந்த நல் இமயத்து[13] **
மணங்கொள் மாதவி நெடுங்கொடி விசும்புற * நிமிர்ந்தவை முகில் பற்றி *
பிணங்கு பூம்பொழில் நுழைந்து வண்டு இசை சொலும் * பிருதி[14] சென்றடை - நெஞ்சே! 6

964 கார் கொள் வேங்கைகள் கனவரை தழுவிய * கறிவளர் கொடிதுன்னி *
போர் கொள் வேங்கைகள் புனவரை தழுவிய * பூம்பொழில் இமயத்து[15] **
ஏர் கொள் பூஞ்சுனைத் தடம் படிந்து * இனமலர் எட்டும் இட்டு - இமையோர்கள் *
பேர்கள் ஆயிரம் பரவி நின்றடி தொழும் * பிருதி[16] சென்றடை - நெஞ்சே! 7

965 இரவு கூர்ந்து இருள் பெருகிய வரை முழை * இரும்பசியது கூர *
அரவம் ஆவிக்கும் அகன்பொழில் தழுவிய * அருவரை இமயத்து[17] **
பரமன் ஆதி எம்பனி முகில் வண்ணன் என்று * எண்ணி நின்று - இமையோர்கள் *
பிரமனோடு சென்று அடி தொழும் பெருந்தகைப் * பிருதி[18] சென்றடை - நெஞ்சே! 8

966 ஓதி ஆயிர நாமங்கள் உணர்ந்தவர்க்கு * உறுதுயர் அடையாமல் *
ஏதமின்றி நின்றருளும் நம் பெருந்தகை * இருந்த நல் இமயத்து[19] **
தாது மல்கிய பிண்டி விண்டலர்கின்ற * தழல் புரை எழில் நோக்கி *
பேதை வண்டுகள் எரி என வெருவரு * பிருதி[20] சென்றடை நெஞ்சே! 9

967 * கரிய மாமுகில் படலங்கள் கிடந்து * அவை முழங்கிட * களிறென்று
பெரிய மாசுணம் வரை எனப் பெயர் தரு * பிருதி[21] எம்பெருமானை **
வரிகொள் வண்டறை பைம்பொழில் மங்கையர் * கலியனது ஒலிமாலை *
அரிய இன்னிசை பாடும் நல் அடியவர்க்கு * அருவினை அடையாவே 10

[12] பிரிதி
[13] இமயத்துள்
[14] பிரிதி
[15] இமயத்துள்
[16] பிரிதி
[17] இமயத்துள்
[18] பிரிதி
[19] இமயத்துள்
[20] பிரிதி
[21] பிரிதி

**அடிவரவு:** வாலி கலங்க துடி மறம் கரைசெய் பணங்கள் கார் இரவு ஓதி
கரிய முற்ற